

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் சாத்தாம் பாடி ஊராட்சியில் ரூ 45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய துணை சுகாதார நிலைய கட்டிடத்தை எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. திறந்து வைத்தார். உடன் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரா வீராசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் கூடப்பாக்கம் ஊராட்சி மேட்டுக் கண்டிகை கே.என்.சுப்பிரமணி அவர்களின் திருஉருவப்படத்தை மாவட்ட கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஒன்றிய கழகச் செயலாளர் டி.தேசிங்கு முன்னிலையில் திறந்து வைத்து மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் உடன் மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி ப.கந்தன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜி. பிரவீன் குமார், கிளைக் கழகச் செயலாளர்கள் எஸ்.குணாசேகரன், தனசேகர், வெங்கடேசன், சாந்தகுமார், சந்தோஷ், ராஜேஷ் உள்பட பலர் உள்ளனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க இலக்கிய அணி துணை அமைப்பாளர்

எம்.ஆர்.வெங்கடேசன் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அன்னதானம் வழங்குகிறார்!

சென்னை, நவ.8-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க இலக்கிய அணி துணை அமைப்பாளர் எம்.ஆர்.வெங்கடேசன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலியை முன்னிட்டு இன்று 08.11.2026 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு எண்: 44/1, சின்ன தம்பி தெரு, குயப்பேட்டையில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அன்னதானம் வழங்குகிறார்.



இதில் எழும்பூர் வடக்குப் பகுதிச் செயலாளர் சொ.வேலு, மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் புலவர் சாமிநாகப்பன், மாவட்ட அவைத்தலைவர் கோ.ஏகப்பன், 78வது வட்ட செயலாளர் சு.மனோகர், எழும்பூர் வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள் ந.பாலு தி.தயாளன் வி.அபாய் சி.சேகர், ஆர்.எம்.ரங்கநாதன், எம்.ஆர்.வெங்கடேசன் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

எழும்பூர் வடக்கு பகுதி துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி எம்.ஆர்.வி. பரத், எம்.ஆர்.வி.ராஜேந்திரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

தேவகோட்டையில் வே.ரூசாவின் 28ஆவது ஆண்டு நினைவு தினம்!

கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மலர் அஞ்சலி!

சிவகங்கை, நவ. 8-

சிவகங்கை மாவட்ட முன்னாள் திமுக இளைஞரணி அமைப்பாளர் மற்றும் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத்தலைவர் வே.ரூசோ அவர்கள் கடந்த 8.11.2001ஆம் ஆண்டு மறைவெய்தினார். இவரது நினைவினைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் சிவகங்கை மாவட்ட தி.மு.க மற்றும் ரூசோ குடும்பத்தினர் சார்பில் நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

நாளை (9-ஆம் தேதி - திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் தேவகோட்டையில் ரூசோவின் 28வது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

தேவகோட்டை தியாகிகள் பூங்காவில் இருந்து முன்னாள் அமைச்சர், சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ முன்னிலையில் அமைதி பேரணி நடைபெறுகிறது.

தியாகிகள் பூங்காவிலிருந்து ரூசோ நினைவிடம் அமைந்துள்ள ராம் நகர் வரை பேரணியாக சென்று அவரது நினைவிடத்தில் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மற்றும் ரூசோ குடும்பத்தினர் மலர் அஞ்சலி செலுத்துவார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்டக் கழகம் மற்றும் ரூசோ குடும்பத்தினர் செய்து வருகிறார்கள்.

திரு.வி.க. நகர் வடக்கு பகுதி 74வது வட்டத்தைச் சேர்ந்த

கண்ணன் (எ) எழில் வடிவேலன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை,நவ.8-

சென்னை கிழக்கு மாவட்ட கழக முன்னோடி அழகுவேல் காஞ்சனா இவர்களின் மகனும், முன்னாள் அமைச்சர் பரிதி இளம்வழுதி அவர்களின் மைத்துனரும், கழக அயலக அணி துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி அவர்களின் மாமாவுமான



முன்னாள் தலைமைச் செயலக ஊழியர் கண்ணன் (எ) எழில் வடிவேலன் *07.11.2026* சனிக்கிழமை மதியம் *12.51* மணியளவில் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத்தினர் மரியாதை செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று *08.11.2026* ஞாயிற்றுக்கிழமை காலை *10.00* மணியளவில் எண்2, சேமாத்தம்மன் காலனி மெயின் தெரு பெரம்பூர்,சென்னை12. பகுதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு ஓட்டேரி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு 4ம் வீதி, வைரவன் சந்து பகுதியில் பாதாள சாக்கடையில் உடைப்பு ஏற்பட்டு வீடுகளில் கழிவு நீர் புகுவதாக தொலைபேசி வாயிலாக புகார் வந்ததன் அடிப்படையில், அப்பகுதிக்கு மாநகராட்சி அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, விரைந்து அப்பணியை முடித்து சேதமாகி உள்ள பகுதியை சரி செய்ய மாநகராட்சி அலுவலர்களுக்கு புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொருளாளர் எம்.லியாகத் அலி அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் மாநகராட்சி அலுவலர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. – கே.ஈ.பிரகாஷ் எம்.பி. – இரா.இராஜீவ் காந்தி பங்கேற்பு!

நீலகிரி, நவ. 8-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளரும், குன்னூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.எம்.ராஜூ அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.ஈ.பிரகாஷ் எம்.பி., கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், தலைமை கழக அறிவிப்பின்படி நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் நகர - ஒன்றிய - பேரூர் கழக மறுசீரமைப்பு பணிகளின் இரண்டாம் கட்ட பணிகளான கிளை கழகங்கள் அமைக்கும் பணிகளை நிறைவு செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் ரவி குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகரக் கழகச் செயலாளர்கள்



ஜார்ஜ், ராமசாமி, ராஜ், தொரை, நெல்லை தமன், தலைமை இளஞ்செழியன், கண்ணன், பிரேம் குமார், பீமன், சிவானந்தராஜா, ராஜா, சுஜேஷ், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வீரபத்திரன், பில்லன், ராஜேந்திரன், உதயதேவன், மோகன் குமார், காளிதாசன், செல்வம், மகேஷ், வாணீஸ்வரி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் முஸ்தபா, ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர்கள் சதீஸ்குமார், நடராஜ், சுந்தர்ராஜ், முத்து, சஞ்சீவ்குமார், உதயகுமார், ரமேஷ்குமார், சுப்ரமணி, சின்னவர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், ராஜா, ராம்குமார், விவேகானந்தன், காந்தல் ரவி, ரஹமத்துல்லா, ராமச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பாபு, நாகராஜ், வினோத் குமார், நகராட்சி தலைவர் சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கௌரி, ஹேமா மாலினி, சித்ராதேவி, ராதா, வள்ளி, ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில் நன்றி கூறினார்.

த.வெ.க. அரசுக்கு இடதுசாரிகள் கண்டனம்!

சென்னை, நவ.8-

ஒன்றிய, மாநில உறவுகள் குறித்த குரியன் ஜோசப் குழுவைக் கலைத்த த.வெ.க. அரசுக்கு இடது சாரிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர், ஒன்றிய, மாநில அரசுகளின் உறவு குறித்து அமைக்கப்பட்ட குரியன் ஜோசப் ஆணையத்தை த.வெ.க. அரசு கலைத்தது ஏற்புடையது அல்ல என்றும் இந்தியாவின் கூட்டு சக்தி சிதைந்தால், மாநில உரிமைகள் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

